முக்கிய வார்த்தைகள்:
*பணிவான / பணிவு*
*ஆணவம்/ கர்வம்*
*பாராட்டு/ வாழ்த்துகள்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**31 அக்டோபர் 2025 / 09 ஜமாதில் அவ்வல் ஹிஜிரி 1447**

# முஸ்லிமிடம் காணப்பட வேண்டிய பணிவு மனப்பான்மை

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، أُوصِي نَفْسِي وَإِيَّاكُمْ بِتَقْوَى ٱللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ ٱلْمُتَّقُونَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொண்டு, நம்மைப் படைத்த அவனை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற் றுங்கள்; அவன் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். நற்குணத்தால் நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வோமாக! மற்றவர்களுக்கு எதிராக ஆணவம் கொள்வது, கர்வம் கொள்வது ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது வாழ்க்கையில் அருள்களையும் நன்மைகளையும் வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**
தன்னை அல்லாஹ்வின் அடியார் எனக் கருதுபவருக்கும், தான் ஒரு அல்லாஹ்வின் அடியார் என்பதை மறந்தவருக்கும் மத்தியில் பிரித்துக் காட்டும் மதிப்பீடு என்ன? அந்த மதிப்பீடு நமது ஓரிறை நம்பிக்கை என்றோ

அல்லது நமது நற்காரியங்கள் என்றோ கூற முடியாது. அல்லது அது நமது வாழ்க்கையின் அந்தஸ்து, நமது வாழ்க்கையின் தரம் என்றும் கூற இயலாது. அந்த மதிப்பீட்டைக் கொண்டு, ஒவ்வொரு முஃமினும் [ஓரிறை நம்பிக்கையாளரும்] எல்லாச் சூழ்நிலைகளிலும் தன்னை அலங்கரித்துக் கொள்வது அவசியமாகும். அதுதான், பணிவு எனும் மதிப்பீடு ஆகும். அதற்கு அரபியில் "தவாதுஃ" எனக் கூறப்படுகிறது. அந்த தன்மையும் மதிப்பீடும் நமது "ஈமான்" எனும் ஓரிறை நம்பிக்கையிலிருந்து புறப்பட்டு வந்து, நமது நடத்தையில் பிரதிபலிக்க வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-ஃபுர்கான்" எனும் அத்தியாயத்தின் 63-வது வசனத்தில் கூறுகிறான்:

وَعِبَادُ ٱلرَّحْمَٰنِ ٱلَّذِينَ يَمْشُونَ عَلَى ٱلْأَرْضِ هَوْنًا
وَإِذَا خَاطَبَهُمُ ٱلْجَٰهِلُونَ قَالُوا۟ سَلَٰمًا ﴿٦٣﴾

பொருள்: "இன்னும் அர்ரஹ்மானுடைய [பெரும் கிருபையாளனுடைய] அடியார்கள் [யாரென்றால்], அவர்கள் தாம் பூமியில் பணிவுடன் நடப்பவர்கள்; மூடர்கள் அவர்களுடன் பேசி [வாதாட] முற்பட்டால் "ஸலாம்" [உனக்கு சாந்தி உண்டாகட்டும் என்று] கூறி [விலகிப் போய்] விடுவார்கள்"

தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, ஒரு பணிவான ஓரிறை நம்பிக்கையாளரின் நடத்தையை மிக அழகாகச் சித்தரிக்கின்றது; இப்படிப்பட்ட நபர், பெருமை கொள்பவராக இருக்கமாட்டார்; கர்வத்துடன் செயல்படமாட்டார்; அல்லது மற்றவர்களைத் தரக்குறைவாகக் கருதமாட்டார்.

அதே சமயம், உண்மையானப் பணிவு என்பது ஒருவர் தனது பலஹீனத்தைக் காட்டுவதோ அல்லது தனது கண்ணியத்தைக் குறைத்துக் கொள்வதோ அல்ல; மனிதர்களிடமிருந்து உலக ஆதாயங்களைப்

பெறுவதற்காகத் தன்னைத் தாழ்த்திக் கொள்வதோ அல்ல. அவ்வாறெனில், ”தவாது:” அதாவது, பணிவு என்பதன் உண்மையானப் பொருள் என்ன?

இமாம் அல்-கஸ்ஸாலி [ரஹ்] அவர்களின் கூற்றின் பிரகாரம், நமது அந்தஸ்தைப் போன்ற அந்தஸ்து யாரிடம் உள்ளதோ அவர்களிடமும் மக்களின் பார்வையில் தாழ்ந்த அந்தஸ்தை உடையவர் என எவர்கள் கருதப்படுகிறார்களோ அவர்களிடமும் நாம் எப்படிப் பழகுகிறோம் என்பதைப் பொருத்து, நாம் பணிவுடன் இருக்கின்றோமோ, இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

பணிவுக்கு ஒரு உதாரணம் கூற வேண்டுமெனில், சிறந்த அந்தஸ்தையும் செல்வாக்கு மற்றும் செல்வத்தையும் பெற்றுள்ள ஒருவரிடம் அல்லது மூத்த பதவிகளைப் பெற்றுள்ள ஒருவரிடம், மற்றவர்களை விடத் தானே உயர்ந்தவன் எனும் சிந்தனை காணப்படாமலிருப்பதாகும். இப்படிப்பட்ட நபர், மற்ற மக்களுடன் பழகும் போது திறந்த மனதுடன் காணப்படுவார்; தனது கருத்துக்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வார்; மற்றவர்களின் உபதேசங்களைக் காதுதாழ்த்திக் கேட்பார்; மற்றவர்கள் செய்யும் நற்காரியங்களையும் அவர்களின் ஆற்றலையும் பாராட்டுபவராக இருப்பார்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள், பணிவுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் மனிதகுலத்தின் தலைவராகவும் அகிலத்தார் அனைவருக்கும் அருட்கொடையாகவும் இருந்தார்கள். இருப்பினும், மற்றவர்கள் அவர்களைப் பாராட்டும் போது அவர்களின் பதில் என்னவாக இருந்தது என்பதை, இமாம் புகாரி [ரஹ்] அவர்கள் பதிவு செய்து அறிவிக்கும் பின்வரும் ஹதீதின் மூலம் அறியலாம்:

ஒருமுறை, ஒரு மனிதர் இறைத்தூதர்[ஸல்] அவர்களிடம் வந்து: ”மனிதகுலத்தின் சிறந்தவரே!” என அவர்களை அழைத்தார்; அவருக்கு இறைத்தூதர்[ஸல்] அவர்கள்:

ذَاكَ إِبْرَاهِيمُ عَلَيْهِ السَّلَام

பொருள்: "அவர்கள் இறைத்தூதர் இப்ராஹிம் [அலை] ஆவார்கள்" எனப் பதில் கூறினார்கள்.

சுப்ஹானல்லாஹ் [அல்லாஹ் மேன்மையானவன்; பரிசுத்தமானவன்] இவ்வாறுதான், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் நன்னடத்தை இருந்தது. "மனிதகுலத்தில் சிறந்தவரே!" எனும் அழைப்புக்கு அவர்கள் முழுமையாகத் தகுதி பெற்றிருந்தும் கூட, அப்புகழ்ச்சியின் காரணமாக தன்னில் பெருமையோ, ஆணவமோ ஏற்படுவதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை. அவர்கள் அந்தப் புகழையும் மரியாதையையும் தனக்கு முன்பு இறைத்தூதராக அனுப்பப்பட்ட இப்ராஹிம் [அலை] அவர்களின் பக்கம் திருப்பி விட்டார்கள்.

இதுதான், ஒரு உண்மையான ஓரிறை நம்பிக்கையாளரின் மனப்பான்மை ஆகும். அவர்கள்[ஸல்] பல சிறப்புத் தன்மைகளால் அழைக்கப்பட்ட போதிலும், தான், பெரும் கிருபையாளனாகிய அல்லாஹ்வின் ஒரு பணிவான அடிமை என்றே தன்னைப் பற்றி எப்போதும் நினைத்தார்கள்.

எனவே, நாம் புகழப்படும் போதும் பாராட்டப்படும் போதும் எவ்வாறு நாம் பதிலளிக்கின்றோம்? நாம் வெற்றியை அடையும் போதும் அல்லது நமது தகுதி மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும் போதும் நம்மில் நாம் பணிவை எவ்வாறு வளர்த்துக் கொள்வது? என நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

இந்த வார "குத்பா" பிரசங்கமானது, பணிவு சம்பந்தமாக இரண்டு பாடங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறது; அவை, இன்ஷாஅல்லாஹ், நமக்குச் சிறந்த வழிகாட்டியாக அமையும்:

**முதலாவதாக: உண்மையான பணிவு என்பது, ஒவ்வொரு அருட்கொடையும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வழங்கப்படுகின்றது என்ற விழிப்புணர்வின் மூலம் ஏற்படுகின்றது என்பதாகும்.**

ஒருவர் சிறந்த மாணவராக இருக்கலாம்; மற்றவர் தொழில் துறையில் வெற்றிமிக்கவராகவோ திறன்மிக்கவராகவோ இருக்கலாம்; இன்னொரு நபர் மரியாதைக்குரிய தலைவராக இருக்கலாம். ஆனால் அவர்களிடம் பணிவு காணப்படுமெனில், அது கர்வம் கொள்வதையும் விட்டும் ஆணவத்தை விட்டும் அவர்களின் உள்ளங்களைப் பாதுகாக்கும்.

மேலும், அல்லாஹ்வின் புறத்திலிருந்து நமக்கு வழங்கப்படும் வெற்றி, நன்மைகள் ஆகியவை, பெரும்பாலும் நமது பெற்றோர்கள், சக ஊழியர்கள் மற்றும் நம்மைச் சுற்றியுள்ள மக்கள் மூலமாக நமக்குக் கிடைக்கின்றன என்பதை நமது பணிவு நம்மை ஒப்புக் கொள்ள வைக்கிறது.

பணிவு மனப்பான்மையானது, *"இந்த வெற்றியை நான் அடைந்துள்ளேன்"* எனும் சிந்தனையை மாற்றி, *"இந்த வெற்றி அல்லாஹ்வினால் எனக்கு வழங்கப்பட்டுள்ளது"* எனும் சிந்தனையை நம்மிடம் ஏற்படுத்துகிறது. எனவே, அருள்களோ அல்லது ஏதாவதொரு நன்மையோ நமக்கு எங்கிருந்து கிடைத்தாலும், அது அல்லாஹ்வின் புறத்திலிருந்து நமக்கு வழங்கப்பட்டுள்ள வெகுமதி என நாம் உணர்ந்து, தொடர்ந்து அருள் புரியுமாறு அல்லாஹ்விடம் நாம் வேண்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

**இரண்டாவதாக: பணிவானது, நமது பழக்கவழக்கங்களையும் சமூக குணங்களையும் சிறப்பாக வடிவமைக்கின்றது.**

பணிவு என்பது, நமது உள்ளார்ந்த தன்மையாக மட்டும் இருக்காமல் நாம் மற்றவர்களுடன் பழகும் போதும் பிரதிபலிக்க வேண்டும். இமாம் முஸ்லிம் [ரஹ்] அவர்கள், இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்ற ஹதீது ஒன்றை பின்வருமாறு பதிவு செய்து அறிவிக்கின்றார்கள்:

"நிச்சயமாக அல்லாஹ் பணிவுடன் இருக்குமாறு எனக்குக் கட்டளையிட்டுள்ளான்; எனவே, எவரும் மற்றவரை ஒடுக்கி, அநீதம்

செய்வது கூடாது; மற்றவர்களைத் தரக்குறைவாகக் கருதி, தற்புகழ்ச்சியில் ஈடுபடக் கூடாது”

எந்த ஒரு சமுதாயம், தன்னில் பணிவு மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்கிறதோ அதன் நடத்தைகள் சிறப்பானதாகவும் மரியாதைக்குரி யதாகவும் ஆகி விடும். பணிவானது, மற்றவர்களைச் சிறுமைப்படுத்துதல், சுயநலச் சிந்தனை ஆகியவற்றைத் தவிர்க்குமாறு நமக்குப் போதிக்கின்றது. பணிவு நமது உள்ளங்களைத் திறக்கின்றது; பொறாமையை அகற்றுகின்றது; தவறாகத் தீர்ப்பளிப்பதைத் தவிர்க்க வைக்கிறது; மன்னிக்குமாறு ஆர்வமூட்டுகிறது. நாம் உயர் பதவியில் இருந்தாலும் நிலை தடுமாறி விடாமல் நம்மைப் பாதுகாக்கிறது.

**அன்பிற்குரிய ஓரிறை நம்பிக்கையின் சகோதரர்களே!**
செல்வாக்குகள், சமூக அந்தஸ்துகள் ஆகிய மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் இவ்வுலகில், பணிவு என்பது நமது உள்ளங்களைப் பாதுகாக்கும் கேடயமாக உள்ளது. ஒவ்வொரு வெற்றியின் பின்னணியிலும் மற்றவர்களின் பங்களிப்புகள் உள்ளன; அதை விட முக்கியமாக அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அருள் உள்ளது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

”தவாதுஃ” எனும் பணிவு மனப்பான்மை, நமது நடத்தையில் பிரதிபலிப்பதற்கும், நமது வாழ்க்கையில் வழிகாட்டும் கொள்கையாக ஆகுவதற்கும் முயற்சிகளை மேற்கொள்வோமாக! பணிவு என்பது பலஹீனம் அல்ல; மாறாக, நமது ”ஈமான்” எனும் ஓரிறை நம்பிக்கை உறுதியாகுவதற்கான அடையாளமாகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, கர்வம் மற்றும் ஆணவத்தை விட்டும் விடுதலையான உள்ளங்களையும், அல்லாஹ்வுக்கு முன்பாக பணிவுடன் தலைவணங்கும் ஆன்மாக்களையும், கீழ்படிந்து நடக்கும் செயல்கள் மூலம் அமைதியையும், நமது வாழ்க்கையில் மிகுதியான அருள்களையும் வழங்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## <u>இரண்டாவது பிரசங்கம்</u>

**الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.**

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
மனிதர்களின் பார்வையில் நாம் யாராக இருந்தாலும் அல்லாஹ்வின் உதவியின் பால் நாம் தொடர்ந்து அவசியமானவர்களாகவே இருக்கின்றோம். எனவே, அல்லாஹ்வை நேர்மையாக வணங்கி, வழிபடுவதன் மூலமாகவும், அவன் மீது உறுதியாக நம்பிக்கைக் கொள்வதன் மூலமாகவும் நமது முயற்சிகளைப் பலப்படுத்திக் கொள்வோமாக!

மாணவர்களுக்குத் தேர்வுகள் நடைபெற்று வரும் இக்காலத்தில், தேர்வுகளை அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்காக, அனைத்து மாணவர்கள் மற்றும் நமது பிள்ளைகளின் உள்ளங்களில் அமைதி வழங்கப்பட வேண்டுமென்றும், அவர்களுக்கு சிந்தனைத் தெளிவுகள் வழங்கப்பட வேண்டுமென்றும் அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! மாணவர்களுக்கு வழிகாட்டி, அவர்களுக்கு உதவி, ஒத்துழைப்பு செய்து வரும் பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் விவேகம், பொறுமை ஆகியவை வழங்கப்பட்டு, அருள் புரியப்படுவார்களாக!

அல்லாஹ், நம்மனைவருக்கும் பயனுள்ள கல்வியறிவைத் தந்தருள்வானாக! நாம் கற்ற கல்வியிலிருந்து பயன் பெறுவதற்கான வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! யா அல்லாஹ்! யா சாமிஃ! யா ஆலிம்! நாங்கள் நிரந்தர

வெற்றியை அடைவதற்காக, உண்மையான கல்வியறிவையும் நேர்மையான ஓரிறை நம்பிக்கையையும் எங்களின் உள்ளங்களில் ஏற்படுத்துவாயாக!

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكانٍ عامَّة، يا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النَّارِ.

**عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.**